**செய்தி வெளியீடு எண்: 021** **நாள் : 14.01.2015**

**<u>செய்தி குறிப்பு</u>**

மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு எம்.சி.சம்பத் அவர்கள், தலைமைச் செயலகத்தில் **12.01.2015** அன்று **2014–2015** ஆம் ஆண்டிற்கான வணிகவரி வருவாய் இலக்கினை அடைவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் வணிகவரித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் மற்றும் வணிகவரி ஆணையர் திரு கே.ராஜாராமன், இ.ஆ.ப ஆகியோருடன் கூடுதல் ஆணையர்களும், பிற அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**2014–2015** ஆம் நிதியாண்டிற்கான வணிகவரித் துறையின் வருவாய் இலக்கு ரூ.**68724/–** கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கில் டிசம்பர் **2014** வரையிலான காலத்தில் வணிகவரி வருவாயாக ரூ.**43259** கோடி ஈட்டப்பட்டுள்ளது. **2014–2015** ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கை எய்திடுவதற்கான வழிவகைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுடன் விவாதித்தார். தாக்கல் செய்யப்பட்ட நமூணாக்களை ஆய்வு செய்தல், மத்திய விற்பனை வரி சட்டத்தின் கீழான வரிவிதிப்பினை விரைந்து செயல்படுத்துதல், தணிக்கை மற்றும் ஆய்வின் போது எழுப்பப்பட்ட கருத்துருக்களை நிறைவேற்றுதல், தணிக்கை / ஆய்வு பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு வரி விதித்தல், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வரியினை வசூல் செய்தல் மற்றும் TDS வரி போன்ற இனங்களில் கூடுதல் கவனம் செலுத்தி முனைப்புடன் துறை அலுவலர்கள் செயல்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும், துறையின் செயலாக்கப் பிரிவின் (enforcement) பணிகளை மேலும் செம்மைப்படுத்தி வரி ஏய்ப்பினை தடுப்பதற்கும், தேவைப்படும் இடங்களில் கூடுதல் பணியாளர்களை நியமித்து செயலாக்கப் பிரிவின் மூலமாகவும் வரி வரவினை உறுதி செய்ய சீரிய நடவடிக்கை

மேற்கொள்ளவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார். துறையில் உள்ள காலிப்பணியிடங்களை உடன் நிரப்பிட நடவடிக்கை மேற்கொண்டால் வரி வசூல் திறன் பெருகுவதற்கு ஆதாரமாக அமையும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதாக துறை அலுவலர்கள் உறுதியளித்தனர்.

அரசு நிர்ணயித்துள்ள வருவாய் இலக்கை அடைவதற்கு வணிகவரித் துறையின் அனைத்து அலுவலர்களும் சீரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் எனவும், வணிகப் பெருமக்களுக்கு நிறைவான சேவையை வழங்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**